## எனது உடல்நலம் குறித்து அன்போடு விசாரித்த அனைவருக்கும் நன்றி!

# தந்தை பெரியாரின் சிலைக்கு இன்று மாலை அணிவித்து மரியாதை செலுத்திடுவீர்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, செப்.17-**

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் "எனது உடல்நலம் குறித்து அன்போடு விசாரித்த அனைவருக்கும் நன்றி" என்றும் "இன்று தந்தை பெரியார் அவர்களின் பிறந்தநாளையொட்டி அவரது திருவுருச் சிலைக்கு கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்த வேண்டும்" என்றும் கூறியுள்ளார்.**



இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

எனது உடல்நலம் குறித்து அன்போடு விசாரித்த அனைவருக்கும் நன்றி!

வைரஸ் தொற்றினால் ஏற்பட்ட காய்ச்சலைத் தொடர்ந்து, மருத்துவர்களின் அறிவுரைப்படி வீட்டிலேயே ஓய்வெடுத்து வருகிறேன். இதன் காரணமாக, ஏற்கெனவே திட்டமி டப்பட்டிருந்த நிகழ்ச்சிகள் ஒத்திவைக்கப் பட்டுள்ளன.

கழகப் பொதுச் செயலாளர் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் ஒத்திவைக்கப்பட்ட முப்பெரும் விழாவிற்கான புதிய தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

**அன்பிற்கும் அக்கறைக்கும் நன்றி!**

தமிழ்நாட்டின் பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் இயக்கங்களைச் சேர்ந்த தலைவர்கள், கலையுலக நண்பர்கள் எனது அலுவலகத்தைத் தொடர்புகொண்டு, எனது உடல்நலம் குறித்து அன்போடுவிசாரித்துள்ளனர். கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் மட்டுமின்றி, பிற கட்சிகள் மற்றும் இயக்கங்களின் தலைவர்கள் காட்டிய அன்பிற்கும் அக்கறைக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சமூகநீதி நாள்**
**உறுதிமொழியை ஏற்றிடுவீர்!**

மருத்துவர்களின் அறிவுரைப்படி, இன்னும் இரண்டு அல்லது மூன்று நாட்கள் வீட்டிலேயே ஓய்வெடுக்க உள்ளேன்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான நேற்று, கழக உடன்பிறப்புகள் மேற்கொண்ட பல்வேறு நிகழ்ச்சிகளைக் கண்டு மகிழ்ந்தேன். அதேபோல், இன்று (செப்டம்பர் 17 ) தந்தை பெரியாரின் பிறந்தநாளையும், திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்ட நாளையும் கழக உடன்பிறப்புகள் எழுச்சியுடன் கடைப்பிடிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.



இன்று தந்தை பெரியாரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துவதுடன், தலைமைக் கழகம் அறிவித்துள்ளபடி, சமூகநீதி நாள் உறுதிமொழியை அனைத்து கழக அலுவலகங்களிலும் ஏற்றிட வேண்டும். கழகத்தின் 78 ஆம் ஆண்டு தொடக்கத்தைக் குறிக்கும் வகையில், கழகக் கொடிகளைப் புதுப்பித்து ஏற்றிட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

## பட்டினப்பாக்கத்தில் தலைமைச்செயலகம் கட்டும் திட்ட

# அரசாணையை ரத்து செய்யத் தவறினால் போராட்டம் வெடிக்கும்!

## சென்னையில் நடைபெற்ற 56 மீனவ கிராம மக்கள் கூட்டத்தில் முடிவு!

**சென்னை, செப். 17 -**

**சென்னை பட்டினப்பாக்கம் பகுதியில் புதிய தலைமைச் செயலகம் அமைக்கும் தமிழக அரசின் திட்டத்தை கைவிடக் கோரி, பட்டினப்பாக்கம் கடற்கரை பகுதியில் 56 மீனவ கிராமங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்ற அவசர கலந்தாய்வுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. கூட்டத்தில், அரசாணையை திரும்பப் பெறாவிட்டால், தொடர் போராட்டங்களை நடத்துவது, அதற்கு முன்னோட்டமாக வீடுகளில் கருப்புக்கொடி போராட்டம் நடத்துவது என்று முடிவு எடுக்கப் பட்டுள்ளது.**



தமிழக அரசு கடந்த 8ம் தேதி வெளியிட்ட அரசாணை அடிப்படையில், சென்னை மயிலாப்பூர் வட்டம், பட்டினப்பாக்கம் பகுதியில் புதிய சட்டமன்றம் மற்றும் தலைமைச் செயலக வளாகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சுமார் ரூ.1,200 கோடி மதிப்பில் 20 லட்சம் சதுர அடி பரப்பளவில் புதிய வளாகம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது. இதற்காக பட்டினப்பாக்கம் பகுதியில் பல்வேறு நிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால்,மீனவகிராமங்களான முள்ளிக்குப்பம், சீனிவாசபுரம், முள்ளி மாநகர், நம்பிக்கை நகர் உள்ளிட்ட மீனவப் பகுதிகளில் பல தலைமுறைகளாக வசித்து வரும் மக்களின் குடியிருப்பு மற்றும் நில உரிமைகள் பாதிக்கப்படும் அபாயம் இருக்கிறது. மேலும், மீன் பிடித்தல், படகுகளை நிறுத்து தல், மீன்பிடி வலைகளை பின்னுதல் மற்றும் உலர்த்துதல், மீன்களை உலர்த்தி விற்பனை செய்தல் உள்ளிட்ட தங்களது பாரம்பரிய கடலோரத் தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்படும் என்று அப்பகுதியில் வசித்து வரும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மீனவர்களின் நில உரிமைகள் தொடர்பாக 1957ம் ஆண்டு மற்றும் 2019ம் ஆண்டு கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை ஆகியவற்றை சுட்டிக் காட்டி, தங்களது வாழ்வாதாரத்தை பாதிக்கும் வகையில் புதிய தலைமைச் செயலகம் அமைக்கும் முடிவை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தினர்.

இதுதொடர்பாக அடுத்தகட்ட போராட்ட நடவடிக்கைகள் குறித்து முடிவு செய்வதற்காக பட்டினப்பாக்கம் கடற்கரை பகுதியில் அவசர கலந்தாய்வுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

எண்ணூர் நெட்டுக்குப்பம் முதல் கோவளம் வரையிலான 56 மீனவ கிராமங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள், நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கூட்டத் தில் பங்கேற்றனர். புதிய தலைமைச் செயலகத் திட்டத்தால் மீனவர்களின் வாழ்வாதாரம் மட்டுமின்றி, அப்பகுதியில் ஏற்கனவே நிலவி வரும் போக்குவரத்து நெரிசலும் மேலும் அதிகரிக்கும். பட்டினப்பாக்கம் பகுதியில் பிரதான சாலை மற்றும் இணைப்புச் சாலை என குறைந்த எண்ணிக்கையிலான சாலைகளே உள்ள நிலையில், தலைமைச் செயலகம் போன்ற மிகப்பெரிய அரசு வளாகம் அமைந்தால் தினசரி வாகனப் போக்குவரத்து கணிசமாக அதிகரிக்கும் என்றும் மீனவர்கள் தெரிவித்தனர்.

முதல்வர் 17ம் தேதி தமிழ்நாடு திரும்புவதாக கூறப்படுகிறது. அதன்பிறகு மேலும் 3 நாட்கள் காத்திருப்போம். 21ம் தேதிக்குள் அரசாணையை ரத்து செய்ய வேண்டும். அதையும் மீறி ஒரு செங்கல்லை கூட நட்டால், அரசு பெரும் விளைவுகளை சந்திக்க நேரிடும். மேலும், புதிய தலைமைச் செயலகத்துக்கான கட்டுமானப் பணிகள் தொடங்கும் பட்சத்தில், மீனவ கிராம மக்கள் ஒன்றிணைந்து தொடர் போராட்டத்தை முன்னெடுக்க முடிவு செய்துள்ளதாக தெரிவித்தனர். கடலில் இறங்கி போராட்டம் நடத்துவது, சாலை மறியல், தொடர் ஆர்ப்பாட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு வடிவங்களில் போராட்டங்களை நடத்த வேண்டும் என்றும், தேவையான கட்டத்தில் முதலமைச்சர் விஜய்யின் பட்டினப் பாக்கம் இல்லம் மற்றும் பனையூரில் உள்ள இல்லத்தை முற்றுகையிடும் போராட்டத்தையும் அறிவிக்க நேரிடலாம் எனவும் மீனவ கிராம பிரதிநிதிகள் கூறினர்.

அரசு உடனடியாக அரசாணையை திரும்பப் பெற்று, புதிய தலைமைச் செயலக திட்டத்தை மாற்று இடத்தில் செயல்படுத்த வேண்டும். இல்லையெனில் அனைத்து மீனவ கிராம மக்களையும் ஒருங்கிணைத்து தொடர் போராட்டம் நடத்தப்படும் என்று கலந்தாய்வுக் கூட்டத்தில் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. அரசு தங்களது கோரிக்கையை ஏற்காவிட்டால், ஆரம்பகட்ட எதிர்ப்பை தொடர்ந்து போராட்டத்தை தீவிரப்படுத்துவோம். 9 கிராமங்களில் இருந்து மட்டுமின்றி, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள மீனவ மக்களையும் ஒருங்கிணைத்து பெரிய அளவில் போராட்டம் நடத்தப்படும் என்றும் மீனவ கிராம பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

ஏற்கனவே, கூடங்குளம் அணு உலைக்கு எதிராக மீனவர்கள் பெரிய அளவில் போராட்டத்தை நடத்தி உலகின் கவனத்தை ஈர்த்தனர். அதேபோன்றதொரு போராட்டத்தை சென்னை மீனவர்கள் நடத்துவார்கள் என்றும் அவர்கள் அரசை எச்சரித்தனர்.

---

### தந்தை பெரியார் பிறந்த நாள்:

## "சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்பு"!

### தலைமைக் கழகம் அறிவிப்பு



"தந்தை பெரியாரின் ஒவ்வொரு பிறந்த நாளும் "சமூகநீதி நாளாக" கடைபிடிக்கப் படும் என்றும்; அப்பிறந்த நாள் அன்று "சமூகநீதி நாள் உறுதிமொழி ஏற்க வேண்டும்" என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பு வகித்தபோது கடந்த 6.9.2021 அன்று சட்டப்பேரவையில் அறிவித்ததற்கிணங்க;

தந்தை பெரியார் பிறந்த நாளான இன்று (17.9.2026) காலை 10.30 மணி அளவில், அந்தந்த மாவட்டக் கழக அலுவலகத்தில், கழகத் தலைவர் அவர்கள் அறிவித்த பின்வரும் "சமூகநீதி நாள் உறுதிமொழி" ஏற்பு நிகழ்ச்சியினை நடத்திட வேண்டுமென அனைத்து மாவட்டக் கழகச் செயலாளர்/பொறுப்பாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இன்றையதினம் காலை 10.30 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள அறிஞர் அண்ணா முத்தமிழறிஞர் கலைஞர் சிலை முன்பு, "சமூகநீதி நாள் உறுதிமொழி ஏற்பு" நிகழ்ச்சி நடைபெறும்.

**"சமூக நீதி நாள் உறுதிமொழி"**

- **'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற அன்பு நெறியும் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பண்பு நெறியும் எனது வாழ்வியல் வழிமுறையாகக் கடைபிடிப்பேன்!**
- **சுயமரியாதை ஆளுமைத்திறனும் பகுத்தறிவுக் கூர்மைப் பார்வையும் கொண்டதாக என்னுடைய செயல்பாடுகள் அமையும்!**
- **சமத்துவம், சகோதரத்துவம், சமதர்மம் ஆகிய கொள்கைகளுக்காக என்னை நான் ஒப்படைத்துக் கொள்வேன்!**
- **மானுடப் பற்றும் மனிதாபிமானமும் ஒன்றே எனது இரத்த ஓட்டமாக அமையும்!**
- **சமூகநீதியையே அடித்தளமாகக் கொண்ட சமுதாயம் அமைக்கும் எனது பயணம் தொடர இந்த நாளில் உறுதியேற்கிறேன்!**

இந்நிகழ்ச்சியில் அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**